1975 நவம்பர் 6]

6. இச்சோதனையின் தன்மையையும், இத்திட்டத்தின் பொது முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமானம், ராடார் சாதனங்கள், செயற்கைமழை பெய்விப்பதற்கான கருவிகள் ஆகியவை குறித்த சுங்கத் தீர்வையைத் தள்ளுபடி செய்யுமாறும், இந்த அரசால் சுங்கத் தீர்வையாகச் செலுத்தப்பட்ட 6,23,742.01 ரூபாயைத் திருப்பிக் கொடுக்குமாறும் இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் இன்னும் கடிதத் தொடர்பு நடைபெற்று வருகிறது.

இணைப்பு IV.

(31 ஆம் பக்கத்தில் 80 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(அ) & (இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் "எட்வர்டு" வகை ரோசா மலர்களிலிருந்து ரோசாப் பிழம்பு (கான்கிரீட்டு) எடுப்பதற்கான முறை ஒன்றை உருவாக்கியுள்ளது. அன்றலர்ந்த ரோசா மலர்கள், காற்றுப் புகாத கொள்கலன்களில் 4 அல்லது 5 மணி நேரம் "ஹெக்கேசன்" அல்லது பெட்ரோலியம் ஈதரில் 65—70 சென்டிகிரேட் தட்ப வெப்ப நிலையில் அமிழ்த்தி வைக்கப்படுகின்றன. ரோசா மலரின் சாறு, ஹெக்சேனில் அல்லது பெட்ரோலியம் ஈதரில் கரைந்துவிடும். பிறகு இந்தக் கரைசல் காய்ச்சி வடித்தல் மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது. கரைசலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சாறுனது "கான்கீரிட்" (ரோசாப் பிழம்பு) என்று அழைக்கப்படும்.

2. மலர்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மெழுகு (முதலியன) வண்ண மூட்டும் பொருள்கள் போன்ற பல பொருள்களை இது கொண்டிருக்கும் எட்வர்டு ரோஜா மலரின் ரோசாப் பிழம்பு (கான்கிரீட்) சிவப்பு வண்ணத்தில் இருக்கும். இது 46—50 சென்டிகிரேட் வெப்பத்தில் உருகக்கூடியது. ஒரு கிலோ கிராம் மலரிலிருந்து 2.3 முதல் 3 கிராம் வரை ரோசாப் பிழம்பு (கான்கிரீட்) தயாரிக்கலாம். இது முகப் பவுடர்கள் ஒப்பனைக் களிம்புகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் செறிந்த கரைசல் சாராவியில் இதனைக் கரைத்துத் தூய்மைப்படுத்தினல் 40 விழுக்காடு நிறையில் தூய நறுமணப் பொருளைத்தரும். இது நறுமணப் பொருள் தயாரிப்பவர்களால் பயன்படுத்தப் படுகிறது.

(1) (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில்) தமிழ்நாட்டில் வணிக முறையில் பயிரிடப்படும் எட்வர்டு வகை ரோசாவிலிருந்து எவ்வளவு ரோசாப் பிழம்பு எடுக்க இயலும் என்பதனையும்.

இணைப்பு

(2) அதன் தரத்தை மதிப்பிடுவதையும் கணிப்பதற்காக சோதனை அடிப்படையில் மட்டுமே தயாரிக்கப்பட்டது.

3. சோதனை அளவில் தயாரிக்கப்பட்ட ரோசாப் பிழம்பு நல்லதரம் வாய்ந்தது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் இந்த ரோசாப் பிழம்பை வணிக முறையில் தயாரிப்பதற்கான வாய்ப்பு சிறப்பாக உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS